தலைப்பு 279 – மாவட்ட செயலகம் - கேகாலை - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கேகாலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை கேகாலை மாவட்ட செயலகத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கலிகமுவ பிரதேச செயலகத்திற்கு சொந்தமான ரூபா 1,900,418 கூட்டுத் தொகையான நிர்மாணிக்கப்பட்டு வரும் உள்ள 06 சேவை இல்ல கட்டிடங்கள் அவை நடைபெறும் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.	பொது கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பேரில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சரியான சொத்து வகையின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	தெரணியகல கிராம அலுவலர் அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 141,044 அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ரூபா 1,961,044 கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,820,000 ஆகவும் சரியாகக் கணக்கீடு செய்வதற்கு ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதியைப் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	அவற்றை முறையாகப் பராமரித்துச் பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேறு நாளதுவரையாக பேணப்பட வேண்டும்.
(ii)	2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையான சொத்துக்கள் மொடியுலினுள் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துக்கள் மொடியுலினுள் நாளதுவரையாக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம், உரிய பதிவேடுகளை நாளதுவரையாக்கப் பட வேண்டும்.
(iii)	நிதிப்பிரமாணம் 388, 389 மற்றும் 451 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காசோலைகள் பதிவேட்டில் காசோலைகளை் பெற்றுக்கொண்டவர் கையோப்பத்துடன் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	காசோலைகளை் பெற்றுக்கொள்வதில்தாமதம் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காசோலைப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும்.

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	முன்னைய ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ரூபா 436,636,000 ஆக இருந்ததுடன், நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதி ரூபா 1,194,862,188 ஆக இருந்ததால், இதன் விளைவாக ரூபா 758,226,188 வித்தியாசம் ஏற்பட்டதுடன், மேலும் இதைச் உறுதிப்படுத்துவதுடன் தொடர்புடைய அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2013 மற்றும் அதற்குப் பிறகு சொத்து மதிப்பீடுகள் மற்றும் புதிய நிர்மாணங்களின் கிரயம் சிகாஸ் முறைமை மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	அனைத்து சொத்துக்களும் அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும், மேலும் அட்டவணைகள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(ii)	யட்டியந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காணியின் பெறுமதி ரூபா 17,700,000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், உரித்து தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	எல்லை நிர்ணயம் செய்வதற்கான திட்ட வரைபடம் எதுவும் இல்லை என்றும் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்த முறையாகச் சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையின் 1.6.3 (அ) (i), 1.6.3(அ) (ii) மற்றும் 4.2 ஆம் பந்திகளின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2 பிரதேச செயலகங்களின் காணி கையேற்கும் பணிகளுக்காக பெறப்பட்ட ரூபா 25,513,970 காணி இழப்பீட்டுத் தொகை, சம்பந்தப்பட்ட நோக்கத்திற்காக செலவிடப்படாததன் காரணமாக 2024 , ஜூலை 31, ஆந் திகதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.	திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் மிகை பண மீதிகளுக்குரிய ஒரு வாரத்திற்குள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவுகளுக்கான பணம் அனுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.	நோக்கத்திற்குட்பட்ட கொண்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு காணி கையேற்றலுக்காக காணி கையேற்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,298,731,340 தொகையில், ரூபா 303,237,005 அல்லது 10 சதவீதம் எஞ்சியிருந்தது. அதேபோல், மீண்டெழும் செலவினத்தின் தேறிய ஒதுக்கீட்டில் 96 சதவீதம்	01/2024 தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 43 சதவீதம் சேமிக்கப் பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.	மதிப்பீடுகள், இயலுமானவரை துல்லியமாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும், மேலும் நிதிஏற்பாடுகளைஒரு

செலவிடப்பட்டிருந்ததுடன், மூலதனச் செலவினத்தின் தேறிய ஒதுக்கீட்டில் 43 சதவீதமாகவும் இருந்தது.		முறையான திட்டத்தின் கீழ் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ) 2024 ஆம் ஆண்டில் 27 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 89 சதவீதம் வரை ரூபா 203,277,929 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.	01/2024 தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	– மேற்படி -

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாண செயற்திட்டத்தில் ஒப்பந்த தொகையான ரூபா 198,832,312 பெறுமதியில் 5 சதவீதம் அதாவது ரூபா 9,941,616, ஆலோசனைக் கட்டணத்தில் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 1,270,041 பெறுமதி நிதிக் கூற்றுக்களில் பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டிற்கான நிதி ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமல் இருந்ததுடன் மதியுரை நிறுவனத்தின் மூலம் கோரிக்கையைச் சமர்ப்பித்த பிறகு கணக்குகளில் அதைக் காண்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக் கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகள் மற்றும் பொறுப்புகளும் வெளிப்படுத்தபட வேண்டும்.

3.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மூலம் பாடசாலை கிரிக்கெட் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பக்க விக்கெட்டுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 15,507,106 நிதியை ஒதுக்கியிருந்ததுடன் பெறுகை செயல்பாட்டில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக, 2024 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் 02 பாடசாலைகளுக்கு ரூபா 2,182,347 மாத்திரம் செலவிடப்பட்டு ரூபா 13,324,759 திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததால் திட்டத்தின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.	சரியான செயன் முன்னேற்றம் அடைந்து கொள்ளாமை, ஒப்பந்ததாரர், பொறியியலாளர் அறிவுறுத்தல்களுக்கு கவனம் செலுத்தாதமை, மழையுடனான காலமாக இருந்தமை இ திட்டத்தைத் தொடர்வேலையாக்கல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை ோன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது.	செயற்திறனாகச் செயற்பட்டு நிதி ஏற்பாடுகளை நோக்கத்திற்காகப் பயன்படுத்தாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் வழங்கப்பட்ட நிதியை சரியான நேரத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

(ஆ)	சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் மூலம் தெடிகம ரஜ மகா விஹாரய வாகன நிறுத்துமிட அமைப்புத் திட்டத்திற்காக ரூபா 1,083,110 ஆன ஒப்பந்தத்தை வழங்கபபட்டிருந்த போதிலும், 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதிக்குள் திட்டம் ஆரம்பிக்கப்படாததால் அந்த நிதி ஏற்பாடு திருப்பி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	திட்டத்தை செயற்படுத்துவதற்கு போதுமான ஏற்பாடுகள் இல்லாததாலும், ஒப்பந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ததாலும் இந்த ஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் குறிப்பிடப்பட்டிருந்தது.	– மேற்படி -
(இ)	விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பல்வேறு விவசாய திட்டங்களுக்கு 2024 ஆகஸ்ட் இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டிற்கு இடையே ரூபா7,473,407 திட்டங்களுக்கு செலவிடப்படாமல் திருப்பி அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பயனாளிகள் 50 சதவீத நிதியை வழங்க விருப்பமின்மையை வெளிப்படுத்தியதால் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் ஆக இந்தமையால் தேர்தல் காலத்தில் திட்டத்தை செயல்படுத்த இயலாமை மற்றும் பெறுகை நடவடிக்கைகளுக்கு நேரமின்மை போன்ற காரணங்களின் பேரல் ஒதுக்கீடுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	– மேற்படி -

3.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	‘‘ருகாஷல்’’ கேபிள் பால பழுதுபார்க்கும் திட்டத்திற்காக தெஹியோவிட்ட பிரதேச செயலகம் ஆகஸ்ட் 12, 2024 அன்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது, மேலும் தொடர்புடைய சங்கம் ஒப்பந்தத்தை மீறி திட்டத்தை துணை ஒப்பந்தம் செய்துள்ளது. பழுதுபார்க்கும் பணி தொடங்கப்பட்டதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், 2024 டிசம்பர் 31, அன்று, பணி முடிந்ததாக ரூபா 2,940,903 செலுத்தப்பட்டது.	விசாரணை அறிக்கை கிடைத்த பிறகு பதில் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணை நடத்தப்பட்டு, முறைகேடான பரிவர்த்தனையில் ஈடுபட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	தெரணியகல பிரதேச செயலகத்தினால் 1904 கூரைத் தகடுகளை கொள்வனவு செய்யும் போது, பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததாலும், விசேட வியாபார பெயரின் கீழ் கொள்வனவு செய்த காரணத்தினாலும் ரூபா 2,779,840 ஆன இழப்பு ஏற்பட்டிருந்தது.	பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறு விலை கோரப்பட்டதாகவும், விவரக்குறிப்புகளை அடையாளம் காண்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	கேகாலை புதிய மாவட்ட செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 நவம்பர் மாதம் அளவில், அதற்காக ரூபா 171,030,580 செலவு செய்யப்பட்டிருந்த போதும், மதிப்பிடப்படாத 04 வேலை விடயங்களுக்கு ரூபா 16,809,560 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதன் நிர்மாணத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான தாமதம் காரணமாக, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விலை விலகளுக்காக ரூபா 48,414,633 தொகை செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.	ஒட்டுமொத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்றும், தொடர்புடைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதன் மூலம் திட்டமிட்டபடி நிர்மாணமானப் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க முறையான திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

3.8 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 ஆல் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (5) இன் பிரகாரம், செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட பிறகு, செயல் நிமித்த கட்டுநிதி சம்பந்தப்பட்ட பணி முடிந்த 10 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 15 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட ரூபா 219,040 பெறுமதியான செயல்நிமித்த கட்டுநிதியை தீர்வு செய்வதில் 11 முதல் 34 நாட்கள் வரையான தாமதம் இடம்பெற்றிருந்தது.	தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் முற்பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்யும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.9 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	10 பிரதேச செயலகங்களின் காணி கையேற்றல் நடவடிக்கைகளுக்காக 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட ரூபா 43,732,215 வைப்புத் தொகை திறமையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் பெறப்பட்ட பணம் வேறு நோக்கங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	காணி கையேறகும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	காணி கையேற்றல் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, தொடர்புடைய பணத்தை வைப்புக் கணக்கில் வைத்திருக்காமல் செயற்திறனாகப் பயன்படுத்த வேண்டும்.
(ஆ)	ருவன்வெல்ல பிரதேச செயலகத்தின் தேசிய முதியோர் செயலகத்தால் செயல்படுத்தப்பட்ட 2 திட்டங்கள் 2024 ஆகஸ்ட் 29, ஆந் திகதி ரூபா 800,000 தொகை பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் 2025 மார்ச் 05 இல் உள்ளவாறு ரூபா 402,445 தொகை பொது வைப்பு கணக்கில் செலவிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய பயனாளிகளுக்கு பொருட்க‹ வழங்க நடவடிக‹ எடுக்கப்பட்டுள்ளது.	நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கான நிதி ஏற்பாடுகளை செயற்திறனாகச் பயன்படுத்தாத உத்தியோகத்தர்களுக் கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் வழங்கப்பட்ட நிதியை பயனாலிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.10 சொத்துக்கள் கணிப்பீடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாவட்ட செயலகத்தின் காணிகளின் பெறுமதி ரூபா 144,350,000 என நிதி கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதி அல்லாத சொத்துக்கள் கணிப்பீடு மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் மாவட்ட செயலகத்தின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 380,643,834 என நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டிற்குட்பட்டிருந்த 06 கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி மாத்திரம் ரூபா 396,263,571 என ஆக இருந்தது.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	நிலையான சொத்துக்களின் நிலைத்திருத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு உரிய சொத்துக்களில் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுகளில் சீராக்கம் செய்ய வேண்டும்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) உரிமை நிகழ்ச்சிதிட்டத்திற்காக கிடைத்த ரூபா 10,815,081 நிதி ஏற்பாடுகளில் ரூபா 8,547,371 மூலதன செலவினமாகவும் ரூபா 1,712,714 மீண்டுவரும் செலவினமாகவும் மொத்தம் ரூபா 10,260,085 செலவிடப்பட்டிருந்த போதும் மானிய பாத்திரங்கள் மற்றும் 753 அனுமதி பத்திரங்களுக்காக மாத்திரம் உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன இதற்கு மேலதிகமாக பிரதேச செயலக பிரிவில் உரித்தை பவிநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நலனாளிகள் தம்புள்ள உள்ள மற்றும் ருவன்வல்ல விற்கான போக்குவரத்து செலவினமாக பஸ் பேருந்துகளுக்காக ரூபா 1,900,185 ஆன செலவினமும் ஒலிபெருக்கி இயந்திர கட்டணங்கள் மற்றும் மின் வழங்கள் கட்டணமாக ரூபா 803,023 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.	காணி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக உறுதி வழங்குவதில் தாமதம் உரிமை நிகழ்ச்சி திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை இதற்கான காரணங்களாகவும் இதில் வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டத்தை விரைவில் நிறைவு செய்வதற்கும் செலவிடப்பட்டுள்ள மேலதிக செலவினம் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு முறையற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியத்தை அறவிடுவதற்காக புதிய தகவல் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் மாவட்டத்தில் ஓய்வூதியமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 16,179,701 தொகையை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் அறவிடுவதற்கு காணப்பட்டன	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு கூடுதலான கொடுப்பனவிற்கான உத்தியோகத்தர்கள் தொடர்பாக இருந்தால் அவர்களுக்கு முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூடுதலான கொடுப்பனவு விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மாவட்டத்தின் 45 சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டிருந்த கடன்களில் 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 302,985,381 ஆன அறவிடமுடியாக் கடன் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் மொத்த அறவீடு 8.63 சதவீதமாக இருந்த 863 ஆக இருந்த போதும் 27 வங்கிகளின் அறவீடு சதவீதம் 1.42 சதவீத முதல் 8.33 வரை மிகவும் குறைந்த வீச்சில் காணப்பட்டன.	ஒவ்வொரு சமூர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் மட்டத்தில் வெவ்வேறு நிகழ்ச்சி திட்டங்களை செயல்படுத்தி கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அறவிட முடியா கடனை குறைக்கும் வகையில் கடன் வழங்கும் செயற்பாட்டை முறைப்படுத்துவதற்கும் கடனை அறவிடுவதை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	ரூவன்வெல்ல மற்றும் புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தில் மண் சரிவினால் இடம்பெயர்ந்த நபர்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு ரூபா 39,396,000 தொகை பகுதி பகுதியாக கொடுப்பணவு செய்யப்பட்டிருந்த போதும் தகைமை சான்றிதழ் வழங்கி குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அவ்வாறு செலவிடப்பட்ட பணத்தின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.	அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் 2022.12.21ஆம் திகதியின் பின்னர் 2016 ஆம் ஆண்டில் மீன் குடியேற்ற நிகழ்ச்சி திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட காரணத்தால் அவர்களின் வேலைகள் முடிவடைந்த போதும் அப்பணத்தை கொடுப்பதற்கு இயலுமை இல்லை என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.·.	முறையான கண்காணிப்பு ஒன்றும் பின் தொடர் செயற்பாடுகளும் அமுலாக்கப்பட்டு நோக்கத்துக்குரிய முயற்சி திட்டங்களை செயற்படுத்தும் வேலை திட்டம் ஒன்றை தயாரித்து குடியேற்றும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும

4.2 செயற்திட்ட நிறைவேற்றலின் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புதிய மாவட்ட செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு ரூபா 183,225,195 செலவு செய்யப்பட்டிருந்த போதும், நிர்மாண செயன்முன்னேற்றம் 88 சதவீதமாக இருந்ததால் எதிர்பார்த்த நோக்கங்களை இதுவரை நிறைவேற்றுவதற்கு முடியாமல் காணப்பட்டது.	பிரதான பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளில் பின்னர் குறைபாடுகளை நிறைவேற்றுவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	விரைவில் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி செய்த்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புளத்கொகுபிட்டிய மற்றும் தெரணியகல பிரதேச செயலக புதிய கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ரூபா 204.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் சரியான திட்டங்கள் தயாரிக்கப்படாததன் பேரில் மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்டு இருந்த குறைபாடுகளை 2025 மே மாதம் வரையிலும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	திரட்டிய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதாகவும் குறைபாடுகளை தயார் செய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டு இருந்தது	- மேற்படி -

4.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிராம சக்தி நுண் நிதி கடன் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் அமைந்துள்ள 130 சங்கங்களில் 2024 டிசம்பர் வரையில் 120 சங்கங்களில் காணப்பட்ட ரூபா 115,459,975 ஆன நிதியை உரிய நோக்கத்திற்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்திய நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்டன.	பொது வைப்பு கணக்கில் வைப்பு செய்வதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக கிராமிய அபிவிருத்தி பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	முறையான வேலை திட்டம் ஒன்றை ஈடுபடுத்தி நோக்கத்திற்குட்ப உட்பட்ட குழுக்களை சரியாக கவரக்கூடிய வகையில் நிதி ஏற்பாடு பயன்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் முறையாக நடவடிக்கை எடுத்து அரசுக்கு கையேற்கப்பட வேண்டும்

(ஆ)	வரக்காபொல பிரதேச செயலகத்தின் மலசல கூடங்கள் இல்லாதவர் களுக்காக மலசல கூட உதவிகளை வழங்குதல் மற்றும் வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக 2024 ஏப்ரல் 18 ஆம் திகதி ரூபா 3,000,000 ஆன நிதி ஏற்பாடு மற்றும் வீடுகளின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 2024 செப்டம்பர் 02 ஆம் திகதி ரூபா 6,000,000 கிடைக்கப் பெற்று இருந்த போதும் 2024 திசெம்பர் 03 ஆம் திகதி வரையில் செயற் திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.	போதிய அளவு நிதியேற்பாடு கிடைக்காததால் வீடமைப்பு நிர்மாணிக்காக முன்னுரிமை வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி ஏற்பாடு செயற்திறனாக பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தாத உத்தி யோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் முறையான வேலை திட்டம் ஒன்றின் கீழ் செயற்திட்டத்திற்காக கிடைத்த பணத்தை உரிய நோக்கங் களுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.
(இ)	ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின் தொரனுவ கிராம அபிவிருத்தி கட்டிடத்தில் தேயிலை சேகரிப்பு நிலையம் ஒன்றாக அபிவிருத்தி செய்யும் செயற் திட்டம் 8 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,890,000 செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி 20 ஆம் திகதி வரையிலும் பகுதிய அளவில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் ஒன்றாக அவதானிக்கப்பட்டது.	எஞ்சிய வேலையை நிறைவேற்றுவதற்காக மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	முறையான நடவடிக்கை எடுத்து நோக்கங்களை நிறைவேற்று வகையில் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்ததை செயல்படுத்த வேண்டும்

4.4 உள்நாட்டு நிதியங்களில் இருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	லெவன்கம டம்பிட்ட விகாரையை பராமரித்துச் செல்வதற்காக ரூபா 1,326.312 ஆன மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு ரூபா 1,226,020 பெறுமதியான பொருட்கள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும் 2025 ஜனவரி 17 ஆம் திகதிய பௌதீக பரிசோதனையின் போதும் அதன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மர கம்பு இருப்பினை தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பாக களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் செயற்பட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தொல்லியல் திணைக்களத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	முறையான கண்காணிப்பொன்று மற்றும் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(ஆ)	ருவன்வெல்ல பிரதேச செயலக பிரிவில் வராகல வேகட குடிநீர் நீடிப்பு நிர்மாணத்தின் மூலம் 300 குடும்பங்களுக்காக நீரை வழங்குவதற்கு ஆரம்ப கட்டமாக வடிகாண் வெட்டி குழாய் முறைமையை நிர்மாணிக்கப்பட்டு நீரினை வழங்குவதற்காக நிறுத்தி வைத்தல் பணம் ஒன்று வைத்துக்கொள்ளாமல் மொத்த பெறுமதியான ரூபா 21,500,000 தொகையையும் நீர் வழங்கல் வழிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் முன்னேற்றம் அடைய பெற்று இருக்கவில்லை.	தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையினால் இச்செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றத்தினை விரைவில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	- மேற்படி - - -

4.5 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் 04 செலவின விடயங்களுக்காக ரூபா 295,100,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 124,741,973 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் பெறுகைத் திட்டத்தின் செயன் முன்னேற்றம் 43 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதியில் காணப்பட்டதுடன் பிரதான பெரிய திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	செலவின கட்டுப்பாடு மற்றும் புதிய செயல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு போதியளவு காலம் ஒன்று இல்லாமை காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன. .	பெறுகை திட்டத்தை சரியாக தயாரிப்பதற்கும் பெறுகை திட்டத்தின் பிரகாரம் உரிய காலத்தில் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	05 பிரதேச செயலக பிரிவுகளில் பகுதி அளவில் நிறைவேற்றப்பட்ட 19 சேவை இல்லங்கள் ஒரு ஆண்டு முதல் 10 வரை யான காலப்பகுதியில் பயன்பாட்டுக்கு எடுக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 13,398,639 ஆன செலவினம் சிக்கனம் அற்றதாக இருந்தது.	நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது	முறைப்படி நிதி ஏற்பாடு பெற்றுக்கொண்டு நிர்மானங்களை பூர்த்தி செய்து விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ)	அறநாயக்க பிரதேச செயலகத்தின் மூலம் வாசனை திரவிய உற்பத்தி கிராமங்களுக்காக மூலப் பொருட்களை சேகரிக்கும் நிலையம் ஒன்றாக கட்டிடம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,062,000 செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் மக்கள் கட்டிடம் பயன்படுத்தப்படாமல் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நலனாளிகளால் தமது இடங்களிலேயே வாசனை திரவிய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு விற்பனை செய்வதால் கட்டிடங்கள் சௌபாக்கிய உற்பத்தி பணியகத்தின் இணக்கப்பாட்டுடன் ஏனைய ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கை ஒன்றுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	முறையான ஆய்வு ஒன்று மற்றும் தேவைப்பாடு இனங் காணாமல் செயற் திட்டத்தை தெரிவு செய்த உத்தியோகத்தர் களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய நிறுவனங் களுடன் தொடர்புபட்டு செயற்திறனான செயற்பாடுகளுக்காக கட்டிடத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(இ)	கேகாலை தீவல பிரிவில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நீர் செயற்திட்டம் ஒன்று நிர்மாணம் கைவிடப்பட்டமையால் ரூபா 1,7,33,622 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நீர் தாங்கி பயன்பாடு இன்றி காணப்பட்டது	முத்தரப்பு மின் பெற்றுக் கொள்ளும் சிக்கல் மற்றும் நிதி ஏற்பாடு பற்றாக்குறையால் தற்காலிகமாக செயற்திட்டநடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது	காணப்படும் சிக்கலுக்காக விரைவில் தீர்வு கண்டு செயந்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.7 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நடைபெற்ற காணி கச்சேரிகளுக்குரிய காணி ஆணையாளர் நாயகம் மாகாண காணி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விவசாய நடவடிக்கைகள் வதிவிட நடவடிக்கைகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்குரிய 104 நலனாளிகளின் கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.	நடத்தப்பட்ட அனைத்து காணிக் கச்சேரிகள் மூலம் இனங் காணப்பட்ட சிக்கல்களுக்கு எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நீண்ட கால தாமதம் காரணமாக வெளிப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை அதற்குரிய தீர்வுகளை கண்டுபிடித்து அனுமதி பத்திரங்கள் மற்றும் மானிய பாத்திரங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	11 பிரதேச செயலகங்களில் மூடப்பட்டிருந்த 98 பாடசாலைகளுக்கு இடையே 29 பாடசாலைகளின் வளவுகள் மற்றும் கட்டிடங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன	குறை பயன்பாட்டுடைய பாடசாலைகளை செயற்திறனான நடவடிக்கைகளுக்காக மேலும் பயன்படுத்துவதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	முறைப்படி நடவடிக்கைகள் எடுத்து குறை பயன்பாட்டுடைய பாடசாலைகள் செயல் திறனாக ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	09 பிரதேச செயலகங்களில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் ஏனைய ஆதனங்களில் இருந்து 1997 முதல் 2024 வரையான காலப் பகுதியில் ரூபா 19,539,297 தொகை அறவிட வேண்டிய குத்தகை தொகையாக காணப்பட்டது.	மேலும் அறவிடப்பட வேண்டிய குத்தகை ஆதனங்கள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது	உரிய காலத்தில் குத்தகை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நீண்டகாலமாக நிலுவையாக உள்ள குத்தகைகளை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	05 பிரதேச செயலக பிரிவுகளில் முன்னேற்றம் அடையாத பெறுமதி செலுத்தப்பட்டு காணிகள் கையேற்பதற்குரிய 13 நலனாளிகளின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா 6,080,720 ஆன நிலுவைத் தொகை ஒன்று அறவிடப்பட வேண்டி இருந்தது.	அறவிடுவதற்கு நிலுவை தொகை காணப்படுவதாகவும் உரிய தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	உரிய காலத்தில் நிலுவை குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் முன்னேற்றம் அடையாத பெறுமதி அடிப்படையில் செலுத்தப்பட்டு இருந்த காணிகளுக்குரிய நிலுவை குத்தகையை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலை பேரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் 2024 ஆம் ஆண்டு பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய மற்றும் இலக்குகள் அடைந்து கொள்வதின் தயார்படுத்தல் தொடர்பான பரிசோதனையின் போது நிலைபேரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் 13 நோக்கங்கள் இனங்கணப்பட்டிருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் 04 நோக்கங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை செயல்படுத்தும் போது இந்நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 17 நோக்கங்களுக்காகவும் தகவல்கள் பெற்றுக் கொண்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களில் அடைந்து கொள்வதில் செயன் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

(ஆ)	செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதில் வெற்றி அளித்தல் குறிகாட்டி இனங்காணப் பட்டிருந்த போதும் 2014 ஆம் ஆண்டில் வளங்கள் வரையறை பிரகாரம் நிறைவேறான நோக்கங்களை நோக்கி அடைவதில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன	முதலாவது காலாண்டில் மாத்திரம் நிதி ஏற்பாடு கிடைத்த போதும் அநேகமான அபவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து தகவல்கள் பெறுவதில் குறைந்த மட்டத்தில் இருந்த காரணத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதில் குறைந்த செயன் முன்னேற்றம் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது	செயன் முன்னேற்றம் குறைவான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனம் கண்டு அதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று செயல்படுத்தப்பட வேண்டும்

6. நல்லாளுகை

6.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 மார்ச் 21 ஆம் திகதிய 02/2018 (i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், பிரதேச செயலகத்தில் இருந்து சேவைகளை நாடும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கான பொருத்தமான பொறிமுறையை நிறுவ கலிகமுவ பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை.	முறைப்பாடு பதிவேடு இருந்தாலும், அது முறையான நடைமுறைகளின் கீழ் பராமரிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான கண்காணிப்பு மூலம் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும், பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு பொது மக்கள் சேவைகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடைமுறை வழிகாட்டல் விதிக் கோவையின் 244 ஆம் உப பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் இடமாற்றங்கள் உட்பட வேண்டிய போதிலும் 512 உத்தியோகத்தர்களுக்கு 1995 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு இடமாற்றங்களுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக இடமாற்றங்கள் மற்றும் ஒன்றிணைந்த சேவைகளின் இடமாற்றங்கள் செயற்படுத்தாமை காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	இடமாற்ற நடைமுறைகள் முறைப்படுத்தப்பட்டு செயற்பாட்டு விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.